"கோவை ஜில்லா, தாராபுரத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலையை மூடி 450-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை இழந்துள்ள அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த இந்த பிரச்சினையைப் பற்றி சட்டப் பேரவையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்கக் கோருகிறேன்."

தலைவர் அவர்களே, இங்கே இருக்கின்ற நிர்வாகம் சாதாரண முதலாளிகளால் நடத்தப்படவில்லை. கூட்டுறவால் நடத்தப்படுகின்ற ஒரு ஸ்தாபனம். அவர்களே இப்படிப்பட்ட பேச்சு வார்த்தைகளை நடத்தி, பிரச்சினையைப்பற்றி முடிவு எடுக்க வேண்டியவர்கள். சர்க்கார் இலாக்காவினர் சமரசம் செய்து வைத்து, லேபர் ஆபீசர் தலையிட்டு, பேசி முடிவு செய்து ஏற்றுக் கொண்டவைகளையும் அமல்படுத்த முடியாது என்று சொல்லி மில்லை மூடிவிட்டார்கள். அதன் விளைவாக அங்கு ஒரு மோசமான நிலைமை ஏற்பட்டுள்ளது. தொழிலாளர்களின் மத்தியில் ஆத்திரமும், அதிருப்தியும் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக அவை நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அரசின் சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்ட காரியமாக இருப்பதால் இதற்கு அனுமதி கொடுக்க மறுக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## (vi) செங்கற்பட்டு மாவட்ட கலெக்டர் அலுவலக ஊழியர்கள் நடத்தப்பட்ட விதம்

**திரு. வி. கே. கோதண்டராமன்:** தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 42-வதின்கீழ் அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த விஷயமாகிய, "செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் ஆபீசில் வேலை பார்க்கும் ஊழியர்களை தவறான முறையில் நடத்தியதைப்பற்றி விவாதிக்க பேரவையின் அலுவலை ஒத்தி வைக்கக் கோரி முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன்.

செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் ஆபீசில் வேலை பார்க்கும் ஊழியர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னால் திங்கட்கிழமை அன்று கலெக்டருடைய பி.ஏ. அவர்கள் தங்களைக் கேவலமான முறையில் நடத்துகின்றார் என்ற காரணத்திற்காக ப்யூன் தவிர— சிரஸ்தார்களில் இருந்து எல்லா ஊழியர்களும் ஒரு நாள் காஷுவல் லீவ் போட்டுவிட்டு வேலைக்கே போகாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படியென்றால் அவர் ஊழியர்களை எவ்வளவு கேவலமான முறையில் நடத்தி வந்திருந்தால் அவ்வளவு ஆத்திரமும், ஆவேசமும், அதிருப்தி மனப்பான்மையும் ஏற்பட்டிருக்கும் என்பது புரிகிறது. இது சம்பந்தமாக கலெக்டரிடத்தில் கூறியிருக்கிறார்கள், சீப் செக்ரட்டரியிடத்தில் கூறியிருக்கிறார்கள், ரெவின்யூ அமைச்சரிடத்திலும், சீப்மினிஸ்டரிடத்திலும் கூறியிருக்கிறார்கள். இந்த நிலை வெடித்து மாநிலம் முழுவதும் பரவி விடுமோ என்கிற அச்சம் ஏற்படுகிறது. மேலும், அந்த பி.ஏ.,

அவர்கள் இந்த அரசினிடத்தில் நல்லெண்ணம் படைத்தவர் அல்ல என்றும் தெரிகிறது. இது மிக முக்கியமான சம்பவம். ஆகவே இதைப்பற்றி விவாதிக்க இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை** : கனம் உறுப்பினர் குறிப்பிட்ட சம்பவம் பற்றிய விவரம் என்னிடத்திலும் தரப் பட்டிருக்கிறது. அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்ற காரணத் தினால் இது இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டிய பிரச்சினை அல்ல என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இது அரசின் சாதாரண நிர்வாகத்திற்குள் வருகிற காரணத்தினால், இதற்கு அனுமதி கொடுக்க மறுக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### (vii) சென்னை பொது மருத்துவ மனை ஹவுஸ் சர்ஜன்கள், மருத்துவக் கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தம்

**THIRU J. JAMES** : Sir, I have given notice of the following adjournment motion—

"That the business of the House do stand adjourned to discuss a definite matter of urgent public importance namely the decision taken by the House Surgeons of the General Hospital and the students of Medical Colleges in the City to go on strike from today indefinitely".

தலைவர் அவர்களே, இந்தச் சம்பவங்கள் பற்றிய விவரம் இரண்டு தினங்களுக்கு முன் சபையில் வந்தது. நான் குறிப்பிட் டுள்ள இந்த விஷயம் இன்று காலையில் 7 மணி முதல் நடைபெற்று வருகிற ஒன்றாகும். பொதுப்பணித்துறை அமைச்சர் அவர் களிடம் தொழிலாளர்கள் வந்து முறையிட்டபோது அவர்களிடம் "உங்கள் பேரில் கண்ணீர் புகைதான் விட்டிருக்கிறேன். மாணவர்களைச் சுட்டு இருக்கிறேன்" எனக் கூறியதாக பத்திரிகை யில் வந்திருந்தது. அதன் காரணமாக மாணவர்களிடையே மனக்கசப்பு வளர்ந்து பல்வேறு கல்லூரிகளில் மன அமைதி இன்மை ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாக இன்று முதல் ஹவுஸ் சர்ஜன்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். இது சாதாரண விஷயம் அல்ல. நிர்வாகத்திற்கு உட்பட்டதும் அல்லாது நிலைமை போய்விட்டது. ஆகவே இந்தச் சட்ட மன்றத்தை ஒத்திவைத்து விவாதிக்க கோருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை**: தலைவர் அவர்களே, பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் தொழிலாளர்களின் மத்தியில் பேசிய பேச்சு பத்திரிகைகளில் முழு அளவிலும் சரியான முறையிலும் வெளியிடப்படவில்லை என்பதை பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கை மூலமாகவே தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் பேசியதாக பத்திரிகையில்